DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**CC.No.7/2025**

Prosecution **PW.3**

Court

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | ஜெயபால் | கிராமம் : | |
| தந்தை பெயர் : | சுப்பிரமணி | வட்டம் : | |
| மதம் : | | தொழில் : | |
| ஜாதி : | | வயது : | 39 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.11.2025

எதிரி ஆஜரில்லை. BNSS பிரிவு 355 ன் படி மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

1. நான் கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் தாலுக்கா, செல்லாண்டிபுரத்தில் வசித்து வருகிறேன். நான் லாரி டிரைவராக இருந்து வருகிறேன். 13.12.2020 அன்று மாலை சுமார் 07.00 மணியிலிருந்து 07.30 மணியிருக்கும் காணியாளம்பட்டிக்கு காய் வாங்கி விட்டு திரும்ப ராஜலிங்கபுரத்தில் வந்து கொண்டிருந்தபோது ஒரு டாரஸ் லாரி கரூரிலிருந்து மணப்பாறை நோக்கி சென்று கொண்டிருந்தது. லாரிக்கு பின்புறம் டாடா ஏஸ் ஆட்டோ வந்தது.

2. வேணுகோபால் காய் வாங்கி கொண்டு கரூரிலிருந்து மணப்பாறை செல்லும் ரோட்டின் இடது பக்கம் வந்து கொண்டிருந்தார். அப்பொழுது டாடா ஏஸ் ஆட்டோ லாரியை முந்துவதற்காக கரூரிலிருந்து மணப்பாறை வரும் ரோட்டில் வலது பக்கம் ஏறி வந்து எதிர்புறம் இருசக்கர வாகனத்தில் வந்த வேணுகோபால் மீது மோதியது. ஆட்டோ டக் என்று வேகமாக வந்து அடித்து விட்டது. டாடா ஏசில் இருந்த டிரைவர் இறங்கி போய்விட்டார். இடது பக்கம் உட்கார்ந்திருந்த நபரும் போய்விட்டார். டாடா ஏசியை ஓட்டி வந்தவர் இருட்டில் ஓடிவிட்டார். அவரை தற்பொழுது பார்த்தால் அடையாளம் தெரியும்.

3. வேணுகோபாலுக்கு அடிப்பட்டு இருந்தது. தனியார் மருத்துவமனைக்கு ஆம்புலன்சில் கூட்டிச் சென்றார்கள். தனியார் மருத்துவமனையில் மருத்துவர் பரிசோதனை செய்து விட்டு இறந்துவிட்டதாக சொன்னார். வேணுகோபால் உடனே அரசு மருத்துவமனைக்கு பிணைவறைக்கு கொண்டு சென்றார்கள். நான் தான் வேணுகோபாலை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றேன். நான் தான் வேணுகோபாலின் உறவினருக்கு போன் செய்து சொன்னேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. இறந்தபோனவருக்கு எனக்கு என்ன உறவுமுறை என்றால் எனக்கு ஒன்றுவிட்ட அக்கா பையன் ஆவார். விபத்து நடந்தது என்ன கிழமை என்று ஞயாபகம் இல்லை 5 வருடம் ஆகிறது. காணியாளம்பட்டியில் என்ன கிழமையில் வார காய்கறி சந்தை போடுவார்கள் என்றால் திங்கள் கிழமையில் போடுவார்கள். விபத்து நடந்தது 13.12.2020 அன்று என்றால் சரிதான். அன்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை என்றால் சரிதான். நான் லாரி டிரைவராக இருக்கிறேன். கரூரிலிருந்து செல்லும் மணப்பாறை ரோடு வடக்கிலிருந்து தெற்காக செல்லும் மேடான பகுதி என்றால் சரிதான். கரூரிலிருந்து வரும் வாகனம் பள்ளத்திலிருந்து மேட்டை நோக்கி வரும் என்றால் சரிதான்.

2. பள்ளத்திலிருந்து மேட்டை கடக்கும்போது 2வது கீரில் தான் ஏற முடியும் என்றால் சரிதான். 2வது கீரின் அதிகபட்ச வேகம் 20 கி.மீ. வேகம் இருக்கும் என்றால் சரிதான். நான் சென்ற வாகனத்தின் பதிவெண்ணை போலிஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சொல்லியுள்ளேன். காயம்பட்டவரை மருத்துவமனையில் நான் தான் சேர்த்தேன் என்றால் சரிதான். அதற்காக கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்தவுடன் போலிசுக்கு நான் தகவல் சொன்னேனா என்றால் நான் சொல்லவில்லை.

3. விபத்து நடந்தபோது சம்பவயிடத்தில் நான் இல்லை என்றாலும், தனியார் மருத்துவமனை விபத்து பதிவேட்டில் நான் கூட்டிச் சென்று தான் எனது பெயர் எழுதியிருப்பார் என்றாலும் நான் தான் கூட்டிச் சென்றேன். முதல் விசாரணையில் சொன்ன சங்கதியை தான் போலிஸ் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான். நான் சந்தைக்கு போய்டுவந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும், திங்கட்கிழமை தான் சந்தை என்றாலும், சரியல்ல. காய்கறி வாங்க கடைக்கு சென்று வந்தேன். நான் இருசக்கர வாகனத்தில்

சென்று வந்திருந்தால் அதன் பதிவெண் தெரிந்திருக்கும் என்றால் சரியல்ல. போலிசார் வழக்கு சம்பந்தமாக எப்போது விசாரித்தார்கள் என்றால் விபத்து நடந்த மறுநாள் விசாரித்தார்கள்.

4. தனியார் ஆம்புலன்சின் பெயர் தெரியுமா என்றால் அன்பு ஆம்புலன்ஸ். நான் சம்பவயிடத்தில் இல்லை என்றாலும், இறந்துபோனவர் எனது உறவினர் என்பதாலும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்தது இருட்டான நேரம் என்றால் சரிதான். லைட் எதுவும் எறிந்து கொண்டிருந்ததா என்றால் இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் நிறைய பேர் வாகனத்தில் சென்றார்கள் என்றால் சரிதான். ஊர் மக்களும் இருந்தார்கள். மேட்டில் ஏறும்போது வேகமாக வரமுடியாது எதிரி முறையாக ஓட்டி வந்தார் இறந்துபோன நபர் தான் சரியாக வெளிச்சம் இல்லாமல் எதிரி வாகனத்தின் மீது மோதி விபத்தை தழுவிக் கொண்டார் என்றால் சரியல்ல. இறந்தவருக்கு இழப்பீடு அதிகமாக வாங்க வேண்டும் என்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவயிடத்தில் இருந்திருந்தால் சரியாக சாட்சியம் அளித்திருப்பேன் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
DN: cn=RAMAIYAH BAGYARAJ, ou=MADURAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.11.18 14:57:20 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கிருஷ்ணராயபுரம்.**